ஓம் சரவணஜோதியே நமோ நம

**பங்குனி முழுமதி விழா குறித்த**

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி விளக்கம்**

12.04.2025

1. அருள் வடிவாக நின்று காத்தருளும்
   ஆறுமுகப் பெருமானை தொழுதேற்றி
   வரமென அரங்கமகா ஞானியர் யானும்
   வழங்குவேன் குரோதி ஆண்டு சேல் திங்களில்

2. முழுமதி நன்னாளாம் இவை நாளில்
   ஓங்காரக்குடிலுக்கும் குடிலின் நிர்வாகிகட்கும்
   இதனொடு உயர் தொண்டாற்றுகின்ற
   தொண்டர் பெருமக்கட்கும்

3. ஓங்காரக்குடிலை நோக்கி
   நலம் கருதி வருகின்ற
   உலக மக்கள் அனைவருக்கும்
   அரங்கன் யான் பாதுகாப்போடு கூடிய

4. அருளாசி விளக்கம் தனை அருளுவேன்
   அப்பனே பிரணவக் குடிலில்
   முழுமதி தோறும் நடக்கின்ற
   ஞானியர்களின் உயர் பூஜை விழா

5. மகான் சுப்பிரமணியப் பெருமானார்
   அருளோடும் தயவோடும்
   உலக மகா சக்திளெல்லாம் ஒன்றிணைய
   அருளமுதில் ஆக்கம் தந்து

6. அமுதை அருமருந்தாக்கி உலகோர்க்கு
   பசிப்பிணி விரட்டுவதோடு
   பிறவா பிணி போக்குகின்ற
   பேரற்புதத்தை சூட்சுமமாய் நிகழ்த்தி வர

7. அன்னதனால் ஓங்காரக்குடிலின் விழா
   உலகே வியக்கும் உயர்வான
   முழுமதி பூஜை விழாவாகும்
   இவை நன்னாளில் அரங்கன் யான் பரிபூரணமாய்

8. சத்திய ஜோதியாம் சரவணஜோதியாக
   உயர்வுபட ஜோதி வழி

எனை நாடி வரும் அன்பர்கட்கு
ஆசியும் கடாட்சமும் பூரண தரிசனமும்

9. தந்து அருள் புரிகின்றேன்
அருளவே பிரணவக் குடிலின்
நிர்வாகம் அரங்கன் என் தயவோடும்
என் கருணையோடும் நடந்து வர

10. அன்னதனால் குடிலின் நிர்வாகம்
உலகே வியக்கும் வண்ணம்
உலகமெங்கும் உள்ள கிளைசங்கங்களும்
இதனை பின்பற்றி சிறப்புற

11. தர்மசாலை நிர்வகிப்பதோடு
சிறப்பான ஞானிகள் பூஜை செய்து கொண்டும்
அரங்கன் என் பலத்தோடு
உலக மகா ஞானியர்கள்

12. அவரவர்களுக்கு பிறவித் தொடர்புள்ள
குருமார்கள் தொடர்பும் கிட்டி இனிதே
அவர்களெல்லாம் பிறவாப் பெரும்பேறு காண
அரங்கன் என் பரிபூரண ஆசிபலமும் உண்டு உண்டு

13. வகைபட இதுநாளில் நடந்து வருகின்ற
ஓங்காரக்குடிலின் விழா ஞானியர்கள் பாதுகாப்போடும்
சுப்பிரமணியப் பெருமானின் கடாட்சத்தோடும்
நடந்து வர இந்த விழாவில்

14. வரும் அன்பர்களெல்லாம் அரங்கன் என்
பரிபூரண ஆசி பெறுவதோடு
இனி பிறவாத பெரும்பேற்றுக்கு
பெரும்கதி பெறும் நிலைகளுண்டு

15. அன்னதனால் தர்மத்தின் பலமாம்
ஓங்காரக்குடிலின் அன்னதானத்தில்
அவரவர்கள் சக்திக்கு தக்கவாறு
பொருளுதவி செய்து கொண்டு

16. இனிதே அரங்கன் யான் வகுத்த
சன்மார்க்க சுத்த சைவ நெறிமுறையை
வேதமாகவும் உயர்நெறிக் கொள்கையாகவும்
ஏற்று இனிதே உயர்வு பட

17. ஞானிகளுடைய நாமஜெபத்தை
அனுதினம் பூஜித்துக் கொண்டு
தர்மத்தில் இயன்ற வண்ணம்
உதவி செய்து வர

18. அவர்கட்கெல்லாம் தயவே வடிவாக
அரங்கன் யான் இறங்கி
அவர்களுக்குள்ளே ஆற்றல்பட
நன்னடத்தை நல்லொழுக்கம்

19. நல்சிந்தையோடு வாசி வசங்களும்
தானாக நடந்தேற ஞானியர்கள்
கூட்டங்களுள் ஒருவராக அரங்கனும் கலந்து
ஞானபண்டிதனே இறங்கி அருளும் வண்ணம்

20. சில அற்புதங்கள் நடக்கக் கூடும்
அன்னதனால் மாதர்ம வழிகளை
மக்களெல்லாம் மனமுவந்து ஏற்று
தர்மவழி வர வருகின்ற அன்பர்க்கெல்லாம்

21. சித்தி கிட்டும் என்பது உறுதி உறுதி
மிகைபட மலேசியா புவியில் இருந்தும்
மேலான பிற தேசங்களில் இருந்தும்
ஓங்காரக்குடில் நோக்கி வருகின்ற அன்பர்க்கெல்லாம்

22. அரங்கன் யான் பயண பாதுகாப்போடு
சர்வ பாதுகாப்பு கூட்டி அருள்புரிவேன்
இதனொடு நிர்வாகத்திலும்
தொண்டர் பெருமக்கள் இவர்களோடும்

23. சகஜமான நிலையும் அன்பு தயவு
மிகுந்த வண்ணம் அவரவர்கள்
விருப்பங்கள் நிறைவேறும் வண்ணம்
தர்மத்துக்கு தக்க தாராள தனபுழக்கமும்

24. தொண்டர்களுக்கு தேவைகளுக்கு ஏற்ற வண்ணம்
பொருள்பலமும் கூட்டி அரங்கன் யான்
அருள் புரிவேன் அன்னதனால் அனுதினமும்
அரங்கா முருகா என்கின்ற

25. நாமஜெபம் போற்றி இனிதே அனைவரும்
என்பால் முழுசரணாகதி கொண்டு செயல்பட

வருகின்ற மக்களுக்கெல்லாம் வல்லமைபட
இனிதே அரங்கன் யான்

26. பேரற்புதங்கள் நிகழ்த்தி இவை பிறவியில்
வந்த நோக்கம் நிறைவேறும் வண்ணம்
சிந்தை தெளிவும் சர்வபலமும்
சித்தி முக்திக்குண்டான உயர் வழியும்

27. காட்டி அருள் புரிவேன்
வகைபட என் மார்க்கம்
இந்த கலியுகத்தில் வள்ளலோடும்
சுப்பிரமணியப் பெருமானோடும்

28. இணைந்து வல்லமை கொண்ட மகா
தர்மவழிகளாக இருக்க
உத்தமமாய் ஏற்று சரணாகதி கொண்டோர்க்கு
உலகத்தில் பிற யோக யாக

29. பிற மார்க்கங்கள் தேவையில்லை
சிந்தைபட தயவாய் நடந்தால் போதும்
சித்திக்கும் முக்திக்கும் பேராற்றலுக்கும்
உண்டான வழிவகை இயல்பாகவே நடந்து

30. அவர்களெல்லாம் பிறவாத பெரும் பேற்றை
ஈதூழே அடைந்து பேரின்பம் காணக் கூடும்
அரங்கன் யான் இந்தவித நன்னாளில்
என் தொண்டர் பெருமக்களெல்லாம்

31. ஆத்ம பலமும் ஆன்ம பலமும்
தேக மனபலமும் கூடி சிறக்க
இதுநாளில் அருட்சுவடி வழி
அருளாசியாக இறங்கி அருளினேன்

32. அப்பனே என் தொண்டர் பெருமக்கட்கு
அளவில்லா வண்ணம் சக்தி கூட்டி
அரங்கன் யான் பயணத்திலும்
பாதுகாப்பான தொண்டிலும்

33. தர்ம சேவையிலும் முழு பூரண
ஆற்றல் கூட்டி பேர் சக்தியாய் உடனிருக்கின்றேன்
இருக்கவே என் நாமஜெபம் போற்ற
உள்வெளி பணியென வசூல் பணி

34. தொடர்பவர்கட்கும் சர்வ பாதுகாப்பு உண்டு உண்டு
உயர்வு பட எனை வேண்டி
உலகோர் நோக்கி இனிதே வசூலுக்கு
செல்லும் மாந்தர்கட்கும் அவர்கட்கு முன்னே சென்று

35. தர்மவான்கள் இவர்கள்பால் தயவோடு நடந்து
தக்க உதவி செய்ய பேரற்புதமும் நடத்துவேன்
அரங்கன் யான் அருளிய முழுமதி
சேல் திங்கட்குண்டான அருளாசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி